NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2008

# TAMIL HOME LANGUAGE: PAPER II

Time: 2½ hours — Marks: 80

## PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This paper consists of 12 pages.
2. Read the instruction to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers in **TAMIL**.
5. In section ONE, answer **2** of the 4 poems **and** the unseen poem 5.1.

IEB Copyright © 2008

## (A) பகுதி ஒன்று

**கொடுக்கப்பட்டுள்ள நான்கு கவிதைகளில் ஏதேனும் இரண்டைப்பற்றி [2] விடை தருக:**

**அதாவது 10 + 10= 20 + 10 [கற்பிக்காத கவிதை] = 30**

கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக :

### வேற்றுமை இல்லை
(பாட்டு - தேசியகவி பாரதியார்)



வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!

பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொருநிற மாகும்!

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி!

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பான் நிறமொரு குட்டி!

எந்த நிறமிருந் தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு

1.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக.

1.1.1 பூனை எங்கள் வீட்டில் ___________ கண்டீர்

1.1.2 ___________ பெற்றதப் பூனை

1.1.3 சாம்பல் ___________ குட்டி (3)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

1.2.1 இக்கவிதை எழுதியவர் யார்?

1.2.2 வெள்ளை நிற பூனை எங்கே வளருது?

1.2.3 அப்பூனை என்ன பெற்றது? (3)

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக.

1.3.1 வெள்ளை நிற பூனை காட்டில் வளருது

1.3.2 பூனை பிள்ளைகள் பெற்றது? (2)

1.4 பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றுள் சரியான விடை தேர்ந்தெடுத்து எழுதுக

1.4.1 பூனை எங்கே வளருது?

1 வீட்டில்
2 காட்டில்
3 அரண்மனையில் (1)

1.4.2 எந்த நிற குட்டி இருந்ததில்லை?

1 சாம்பல் நிறம்
2 சிவப்பு நிறம்
3 வெள்ளை நிறம் (1)

**[10]**

அல்லது / or

1.5 இக்கவிதையை அடிப்படையாக கொண்டு,

பூனைகளைப்பற்றி 10-12 வரிகள் எழுதுக:

**[10]**

2. குயில் பாட்டு

2.1 கீழ்வரும் வரிகளைப் படித்துச் சரியான விடை தருக:

மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே
நீலக் குயிலிருந்து நீண்டகதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கிழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,
கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன்; நெஞ்சிலனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன், மெய்
[வெயர்த்தேன்,



2.1.1 இந்த பாட்டை ஏன் "குயில் பாட்டு" என்று கூறுகிறோம்?

2.1.2 தன் மகளின் திருமணத்திற்குச் சின்ன குயிலியின் தந்தை என்ன ஏற்பாடு செய்தார்?

2.1.3 சின்னக் குயிலியின் மாமன் மகன் யார்?

2.1.4 சின்னக் குயிலி மாமன் மகனிடம் சண்டை போட யார் வந்தது?

2.1.5 மறுபிறப்பில் மாடன் எவ்வாறு பிறந்தார்?

2.1.6 மறுபிறப்பில் குரங்கன் எவ்வாறு பிறந்தான்

2.1.7 இளவரசனைப்பற்றி 4 - 5 வரிகள் எழுதுக.

**[10]**

IEB Copyright © 2008

## 3. குயிலும் குரங்கும்

3.1 **கீழ்வரும் கதையை நன்றாக படித்து, பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக :**

மற்றைநாட் கண்ட மரத்தே குயில்லை
2. சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்து வருகையிலே
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனாம் பொய்த்தேவே!
2.1 நெஞ்சகமே! தொல்விதியின் நீதியே! பாழுலகே!
கண்ணாலே நான் கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்
பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதனைப் போற்றும் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே

3.1.1 இப்பாட்டை எழுதியவர் யார்? (1)

3.1.2 எந்தப் பறவையைப் பற்றி எழுதியுல்வது? (1)

3.1.3 மூன்றாம் வரியில், "பெண்மையே" என்று எழுதியுல்வது. யார் இந்த பெண்மணி? (2)

3.1.4 மறுபிறப்பில் யார் குரங்காக பிறந்தது? (2)

3.1.5 ஐந்தாம் வரியில் "என்னுரைப்பேன்" என்ற சொல்லுக்கு அதே பொருள் தரும் வேறு ஒரு சொல் தருக. (2)

3.1.6 "முன்னே" (17வதுவரி) என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக (2)

**[10]**

அல்லது / or

3.1.7 மேற்கண்ட கவிதையைச் சுமார் 10-12 வரிகளில் சுருக்கி எழுதுக. **[10]**

## 4. திருக்குறள்

4.1 சரியான விடை எழுதுக.

4.1.1 'திருக்குறள்' என்ற நூலை எழுதியவர் யார். (1)

4.1.2 திருக்குறளில் வரும் மூன்று பகுதிகள் யாவை? (3)

4.1.3 கடவுள் வாழ்த்து எந்தப் பகுதியில் உள்ளது? (2)

4.1.4 பின்வரும் குறள்களை நிரப்புவதற்கு ஏற்றச்சொற்களைத் தருக.

4.1.4.1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி (1)

4.1.4.2 கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன் (1)

4.1.4.3 மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார் (1)

4.1.4.4 வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்(கு) . (1)

**[10]**

அல்லது/ or

4.1.5 திருவள்ளுவரைப் பற்றி 10 - 12 வரிகள் எழுதுக:

IEB Copyright © 2008

5. கற்பிக்காத கவிதை

5.1 கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து பின்வரும் கேவிகளுக்கு சரியான விடை தருக :

## முரளி வீட்டுத் திருமணம்

முரளி வீட்டில் திருமணம்
முறையாய் அழைப்பு விடுத்தனர்.
அரசு ஆ கௌ அப்துல்லா
அழைப்பை ஏற்றுச் சென்றனர்.



முரளி அப்பா முன்வந்து
மூவரையும் வரவேற்றார்.
கரவே சற்றும் இல்லாமல்
கனிவாய் அவர்கள் அமர்ந்தார்கள்

மண மேடையில் மணமக்கள்
வந்து வணங்கி அமர்ந்தனர்.
வணங்கி அமர்ந்த அவர்களை
வந்த வர்கள் வாழ்த்தினர்.



சீன ரோடு மலாயரும்
சேர்ந்து மண மக்களை
வான ளாவ வாழ்த்தினர்
மகிழ்ந்து பரிசு வழங்கினர்.

"எங்கள் வீட்டுத் திருமணம்"
என்று சொல்லிச் சொல்லியே
தங்கள் அன்பைப் பொழிந்தனர்;
சகோ தரர்போல் பழகினர்.

விருந்து வேளை வந்தது
விரும்பி யுண்டு மகிழ்ந்தனர்;
இருந்த நல்ல வெற்றிலை
எடுத்துப் போட்டுக் கொண்டனர்.

5.1.1 இது யார் வீட்டு திருமணம் ? (1)

5.1.2 யார் மூவரை வரவேற்றது ? (1)

5.1.3 மணமக்கள் எங்கே அமர்ந்தனர் ? (1)

5.1.4 யார் மணமக்களை வாழ்த்தினர் ? (1)

5.1.5 நான்காம் செய்யுலில் [4th verse] எந்த இரண்டு நாட்டைப்பற்றி எழுதியுல்லது ? (2)

5.1.6 வந்தவர் எவ்விதத்தில் பழகினர் ? (2)

5.1.7 சரியாக எழுதுக :

5.1.7.1 மணதிரும் (1)

5.1.7.2 ழைப்அபு (1)

**[10]**

அல்லது/ or

5.2 **இந்தப் பாடலை அடிப்படையாக கொண்டு,**

தமிழ் திருமணத்தைப் பற்றி 8 - 10 வரிகள் எழுதுக. **[10]**

IEB Copyright © 2008

# பகுதி இரண்டு

B கதை : இரு நண்பர்கள்

சரியான விடை எழுதுக:

1.1 இக்கதையின் இரண்டு நண்பரகள் பெயர் என்ன ? (2)

1.2 யார்க்கு கடவுள் நம்பிக்கை இல்லை ? (2)

1.3 யார் ஒரு முள்ளை மிதித்தது ? (2)

1.4 எவர் நடந்ததை எல்லாம் அறிந்தது ? (2)

1.5 கதையின் பிரகாரம் முள்ளில் என்ன இருந்தது ? (2)

1.6 கடவுள் யாரைக் கை விட மாட்டார் ? (2)

1.7 சுடலைமுத்துவுக்கு எவ்வலோவோ காசு கிடைத்தது? (2)

1.8 யாருக்கு பெரிய புதையல் கிடைத்தது? (2)

1.9 முடிவு செய்க :

ஆலயம் தொழுவது---------------------------------------------- (2)

1.10 கீழ்வரும் சொற்களுக்கு எதிர்சொல் தருக :

1.10.1 உண்டு : (1)

1.10.2 சிறிய : (1)

1.10.3 இந்த : (1)

1.11 சரியாக எழுதுக : உம்.பன்நண்
= நண்பன்

1.11.1 காதில்லத் (1)

1.11.2 யர்பெ (1)

1.11.3 வயில்ழி (1)

1.11.4 இவரும்ரு (1)

**[25]**

அல்லது / or

1.12 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகளிலிருந்து இரு நண்பர்கள் என்ற கதையைப்பற்றி சுமார் 20 வரிகள் எழுதுக : **[25]**

IEB Copyright © 2008

[C] கட்டுரை : கதை பகுதி

# கள்ளர்கள் கொள்ளை

மட்டியூர் என்னும் ஊரிலே மாணிக்கசாமி என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தான். அவன் பல வழிகளாலும் பொருளைத் தேடினான். அவனிடம் ஏராளமான பொருள் குவிந்தது. மாணிக்கசாமி அந்தப் பொருள்களை நன்கு பயன்படுத்தவில்லை. எளியவர்களுக்கு ஒன்றும் கொடான். விருந்தினர்களுக்குக் கூட உணவிடான். விருந்தினர்களைக் கண்டால் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல் அனுப்பி விடுவான்.

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், ‘சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்’ என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

சாவு என்று ஒன்று இருக்கின்றது என்பதையும் அது தனக்கும் உண்டாகும் என்பதையும் மாணிக்கசாமி அடியோடு மறந்து விட்டான். அப்பொருள்களைக் கள்ளர்கள் வந்து கவர்ந்துகொண்டால் என்ன செய்வது என்னும் அச்சம் மாத்திரம் அவன் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அதனால் அவன் இராப்பகல் உறக்கம் கெட்டு வருந்திக் கொண்டிருந்தார்.

மாணிக்கசாமியிடம் பொருள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் இரவு தீவட்டிக் கொளைக்காரர்கள் பலர் மாணிக்கசாமியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

IEB Copyright © 2008 

மாணிக்கசாமியைத் தடிகளால் நன்கு புடைத்தனர். முன்னரே உறக்கம் இல்லாமல் இளைத்திருந்த மாணிக்கசாமி குற்றுயிராகி விட்டான். மாணிக்கசாமியின் மனைவி மக்கள் கள்ளர்களின் அச்சத்தால் எப்பொழுதும் வீட்டில் படுக்கும் வழக்கம் இல்லை. பக்கத்தில் உள்ள வீடுகளில் தாம் படுப்பார்கள்.

கள்ளர்கள் கொள்ளை இடுவதை ஊரார்கள் பார்த்தனர். கள்ளர்கள் மிகுதியாக இருந்தபடியாலும் தடுக்க முடியவில்லை. கள்ளர்கள் மாணிக்கசாமியின் பொருள்கள் அனைத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். மாணிக்கசாமி, 'அந்தோ! நான் கூட்டிக் கூட்டிக் கொள்ளை கொடுக்கும் தேனீ ஆனேனே!' என்று புலம்பி நொந்து இறந்தான்.

'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.'

1.1 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக

1.1.1 மாணிக்கசாமி எந்த ஊரில் வாழ்ந்திருந்தான்? (1)

1.1.2 விருந்தினர்களைக் கண்டால் மாணிக்கசாமி என்ன சொல் அனுப்பி விடுவான்? (1)

1.1.3 மாணிக்கசாமியைப் புலவர்கள் தேடிச் சென்றபோது மாணிக்கசாமி எதைச் சொல் இகழ்ந்துரைப்பான்? (2)

1.1.4 மாணிக்கசாமி எதை அடியோடு மறந்துவிட்டான்? (2)

1.1.5 ஒரு நாள் இரவில் மாணிக்கசாமியின் வீட்டுக்கு யார் வந்தார்கள் அவர்கள் என்ன செய்தார்கள்? (2)

1.1.6 கடைசியில் மாணிக்கசாமி என்ன சொல் நொந்து இறந்தான்? (2)
**[10]**

<u>அல்லது</u>

1. 2 *இக்கதையை நன்றாக படித்து, சுமார் 20 - 25 வரிக்குள் சுருக்கி எழுதுக :* **[25]**

**Total: 80 marks**

IEB Copyright © 2008